**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.HMOP.No. 127/2021**
**Deposition of witness of Respondent – R.W.1 (நவமணி)**
**19.06.2025**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இலுப்பூர் காவல் நிலையத்தில் ம.சா.ஆ.16 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். கீரனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ம.சா.ஆ.19 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மேற்கண்ட 2 புகார்களையும் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. மேற்கண்ட 2 புகார்கள் பற்றியும் எனது எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. ஆவண எண்கள் 602/2007, 152/2010 மற்றும் 509/2011 ஆகிய ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் மனுதாரரால் எனது பெயரில் வாங்கப்பட்டவை என்றால் இல்லை, நான் சம்பாதித்து வாங்கிய சொத்துக்கள் ஆகும்.

4. மேற்படி சொத்துக்கள் வாங்கும்போது எங்கு வேலை பார்த்தேன் என்றால் புது வாழ்வு திட்டத்தில் வேலை பார்த்தேன். மேற்படி விவரத்தை நான் எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. ஆவண எண்கள் 569/2007, 826/2008 மற்றும் 849/2018 ஆகிய மனுதாரர் பெயரில் உள்ள அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் இல்லை.

6. நானும், மனுதாரரும் 6 வருடங்களுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் பிரிந்து வாழவில்லை, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் 6 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. என் மீதும், எனது குடும்ப உறுப்பினர்கள் மீதும் மனுதாரர் ம.சா.ஆ.5 புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னாலும், எனது குடும்பத்தாலும் பாதிக்கப்பட்ட மனுதாரர் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் ம.சா.ஆ.6 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. 20.08.2012 ஆம் தேதி மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் என்னையும், எனது குடும்பத்தாரையும் இலுப்பூர் காவல் துறையினர் விசாரித்தனரா என்றால் இல்லை.

20.08.2012 ஆம் தேதி மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் என்னையும், எனது குடும்பத்தாரையும் இலுப்பூர் காவல் துறையினர் விசாரித்து எங்களை கண்டித்து அனுப்பிவைத்தார்கள் என்றால் சரியல்ல.

9. மனுதாரர் 03.12.2012 ஆம் தேதி இலுப்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் நான் விசாரணைக்கு ஆஜரானேன் என்றால் இல்லை. மனுதாரர் 03.12.2012 ஆம் தேதி இலுப்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் நான் விசாரணைக்கு ஆஜரானேன் என்றும், மனுதாரரை எவ்வித கொடுமையும் செய்யமாட்டேன் என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

10. வழக்கு நிலுவையில் உள்ள போது 20.01.2022 ஆம் தேதி புதுக்கோட்டை சமூக நலத்துறையில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவின் பேரில் அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது சமூக நலத்துறையால் அனுப்பப்பட்ட அழைப்பாணை தான். **அது ம.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

11. எனது மகன் 05.03.2021ஆம் தேதி விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த விவரத்தை எனது தோழிகள் சொல்லி தான் மனுதாரர் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 05.03.2021ஆம் தேதிக்கு முன்பு எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தோம் என்றால் அதற்கு 6 மாதத்திற்கு முன்பிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம். அந்த 6 மாதம் என்பது 2020ஆம் ஆண்டு 6–வது மாதம் இருக்குமா என்றால் இருக்கும்.

12. மனுதாரர் மீது இலுப்பூர் காவல் நிலையத்தில் எனது மகள் கொடுத்த புகாரின் பேரில் இலுப்பூர் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு எண் 77/2024 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 2–வது சாட்சி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குற்ற இறுதி அறிக்கை மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். **அது ம.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

13. நான் மனுதாரருக்கு ஏற்படுத்திய கொடுமை காரணமாகவும், அவரை பிரிந்து வாழ்ந்து வருவதாலும் விவாகரத்து கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

14. சமூக நலத்துறையில் நான் கொடுத்த புகாரில் என்ன சொல்லி கொடுத்திருந்தேன் என்றால் அவர் மது அருந்திவிட்டு வந்து அடித்து கொடுமை படுத்தினார். அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்ககோரி மனு கொடுத்தேன்.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
சார்பு நீதிபதி,
கீரனூர்.